**செ.வெ.எண்-08** **நாள்-07.04.2018**

# அரியலூர் மாவட்டத்தில் தொடுவானம் (NEET) போட்டித்தேர்விற்கு பயிற்சி பெறும் 12ம் வகுப்பு மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் விழா.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் 12-ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வு எழுதிய மாணவ, மாணவியர்களுக்கு தொடுவானம் (NEET) போட்டித்தேர்விற்கு பயிற்சி பெறுவதற்காக விலையில்லா மடிக்கணினிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தலைமையில், மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஜெ.கே.என்.இராமஜெயலிங்கம்** அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

**இந்நிகழ்ச்சியில், விலையில்லா மடிக்கணினிகளை வழங்கி மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா அவர்கள் பேசியதாவது :-**

தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் 12ம் வகுப்பு மாணவ, மாணவியர்களுக்கு அனைத்து வகையான போட்டித்தேர்வுகளுக்கும் மற்றும் திறன் தேர்வுகளுக்கும் தயார் செய்வதற்கு ஏதுவாக மாநில அளவில் 412 பயிற்சி மையங்கள் தேர்வு செய்யப்பட்டு, முதற்கட்டமாக 100 பயிற்சி மையங்களும், 2வது மற்றும் 3வது கட்டமாக 312 மையங்களும் தொடங்கப்பட்டு, தொடுவான பயிற்சி மையம் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

2017-18ம் கல்வி ஆண்டில் அரியலூர் வருவாய் மாவட்டத்தில் 6 தொடுவானம் பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டு, இம்மையங்களில் 12ம் வகுப்பு தேர்வு எழுதிய மாணவர்களுக்கு பயிற்சி வகுப்புகள் நடைபெறுகிறது.

இப்பயிற்சி பெறும் மாணவர்களுக்கு வலுசேர்க்கும் வகையில் தமிழக அரசின் சார்பில் வழங்கப்படும் விலையில்லா மடிக்கணினி மிக உதவியாக இருக்கும் என்பதால், இன்று (07.04.2018) 97 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளது. இம்மடிக்கணினியை பயன்படுத்தி போட்டித்தேர்வுகளை மாணவ, மாணவியர்கள் எளிதாக எதிர்கொள்ளுமாறு மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் பேசினார்கள்.

**இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் பேசியதாவது :-**

இம்மாவட்டத்தில் 12ம் வகுப்பு தேர்வு எழுதிய மாணவர்கள் போட்டித்தேர்வுகளை கண்டு பயம் கொள்ள தேவையில்லை. தமிழக அரசு போட்டித்தேர்வுகளை எதிர்கொள்ள தேவையான பயிற்சி வகுப்புகள் சிறந்த ஆசிரியர்களைக்கொண்டு திறன்பட தொடுவானம் (NEET) பயிற்சி மையத்தினை ஏற்படுத்தியுள்ளது.

இம்மாவட்டத்தில் தொடுவானம் (NEET) மையங்களில் பயிற்சி பெற இணையதளம் மூலம் 645 மாணவ, மாணவியர்களில், நீட் தேர்வுக்கு விண்ணப்பித்த 33 மாணவர்கள், 64 மாணவிகள் என 97 மாணவ, மாணவியர்களுக்கு இன்று (07.04.2018) விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.இவ்விலையில்லா மடிக்கணினிகள் நீட் பயிற்சிக்கு மட்டும் அல்லாமல், உங்கள் எதிர்காலத்தை தீர்மானிக்கக்கூடிய சாதனமாக இம்மடிக்கணினிகள் அமையும்.

எனவே, மாணவ, மாணவியர்கள் தாங்கள் மருத்துவப்படிப்பிற்கான வாய்ப்பை பெறுபவர்கள் திறமையாக படித்து மருத்துவத்துறையில் சாதிக்க வேண்டும். மருத்துவ கல்லூரியில் இடம் கிடைக்காத மாணவர்கள் மனம் தளர்ந்துவிடாமல், இதர துறைகளான பொறியில் மற்றும் கலைக்கல்லூரிகளில் தாங்கள் விரும்பும் துறைகளை தேர்வு செய்து, தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தின் மூலம் அரசு அலுவலர்களாக பணிபுரிய வாய்ப்பினையும், அரசுத்துறை சார்ந்த ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் போன்ற அதிகாரிகளாக வரும் வாய்ப்பினையும் உருவாக்கிக்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் பேசினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் சே.தனசேகரன், திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை ஜி.கே.லோகேஷ்வரி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அ.புகழேந்தி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் (மேல்நிலை) பொய்யாமொழி, பள்ளிகல்வி ஆய்வாளர் பழனிசாமி மற்றும் ஆசிரியர்கள், மாணவ, மாணவியர்கள், அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**